

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 19.03.2025 | மதுரை வடக்கு | மதுரை கிழக்கு | பேருந்து நிலையம் அருகில், ஆனையூர் | **திண்டுக்கல் லியோனி,** சி.ராஜபாரதி |
| 2 | 19.03.2025 | ஈரோடு மத்திய | பெருந்துறை | காஞ்சிக்கோயில் | இந்திரகுமார் தேரடி, ரா.அபிநயா |
| 3 | 19.03.2025 | விழுப்புரம் வடக்கு | திண்டிவனம் | கூனிமேடு | வழக்கறிஞர் தமிழன்பிரசன்னா, ச.ஷாநவாஸ் |
| 4 | 20.03.2025 | மதுரை வடக்கு | சோழவந்தான் | சந்தை அருகில், வாடிப்பட்டி | **நாஞ்சில் சம்பத்,** அ.செசிலின் சந்தியா தீப்தி |
| 5 | 20.03.2025 | விழுப்புரம் வடக்கு | செஞ்சி | அப்பம்பட்டு | **பொன்.முத்துராமலிங்கம்,** குடிஅரசு |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 16–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (18.3.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் சி.பெர்னான்டஸ் ரத்தின ராஜா, அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகன் டாக்டர் மேத்யூ எபன் – டாக்டர் சிந்தியா ஆகிய புதுமணத் தம்பதியுடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை முதல்வரின் முகாம் அலுவலகத்தில் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் இசையமைப்பாளர் கலைமாமணி தாயன்பன் ஆகியோர் தங்களது 50 வது திருமண நாளினை முன்னிட்டு, சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

### வெளிநாடுகளெல்லாம் பாராட்டிப் பின்பற்றும்

## காலை உணவு மாபெரும் வெற்றித் திட்டம்! மாணவர்கள் வாக்காளர்களா?

### பேரவையில் – அ.தி.மு.க. உறுப்பினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்க பதில்!

**சென்னை, மார்ச் 19-**

**சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் கே.பி.முனுசாமி பேசும் போது வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களுக்காக உங்கள் ஆட்சியில் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தி வருகிறீர்கள் என்று பேசினார்.**

அப்போது முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டு பேசியதாவது :

காலை உணவுத் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) அறிவிக்கப்பட்டு, வெற்றிகரமாக, வெளிநாடுகளெல்லாம்கூட பாராட்டி, அதை பின்பற்றலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கக்கூடிய மாபெரும் திட்டம். அவர்கள் வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களா? (மேசையைத் தட்டும ஒலி)

வாக்களிப்பதற்காகவா அல்லது வாக்களிக்கத் தவறியவர்களுக்காகவா என்கிற எண்ணத்தோடு திட்டங்கள் தீட்டப்படுகின்றனவா என்று விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி பொறுப்பேற்ற நேரத்தில் முதன்முதலில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த போது, 'இந்த ஆட்சியைப் பொறுத்தவரை, வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல; வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்துத்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் தாண்டி நான் சொன்னேன், வாக்களித்தவர்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்; வாக்களிக்காதவர்கள், இவர்களுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோமே என்று வருத்தப்பட வேண்டும்; அந்தளவிற்கு எங்களுடைய ஆட்சி இருக்கும்' என்பதை நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அதன்படிதான் இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த விவாதம் தேவையில்லாத விவாதம்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டு பேசினார்.

### மதுரை – வாடிப்பட்டி – டி.ஆண்டிப்பட்டியில் – கழிவு நீர்க் குழியில் மூழ்கி உயிரிழந்த

## குழந்தையின் பெற்றோருக்கு ஆறுதல் - நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 19-**

**மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், டி.ஆண்டிப்பட்டி கிராமத்தில் கழிவுநீர்க் குழியில் மூழ்கி உயிரிழந்த குழந்தையின் பெற்றோருக்கு ஆறுதல் தெரிவித்து மற்றும் நிதியுதவி வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், டி.ஆண்டிப்பட்டி கிராமத்தில் வசித்துவரும் சந்தனகருப்பு - திருமதி. கிருஷ்ணவேணி தம்பதியரின் இரண்டு குழந்தைகள் கேசவன் (வயது 4) மற்றும் ரோஷன் ஆகிய இருவரும் கடந்த 15.3.2025 அன்று மாலை 4.00 மணியளவில் வீட்டினருகே விளையாடிக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக அருகிலிருந்த கழிவு நீர்க் குழியில் விழுந்துள்ளனர். இச்சம்பவத்தில் நீரில் தத்தளித்த ரோஷன் அருகில் இருந்தவர்களால் மீட்கப்பட்ட நிலையில் மற்றொரு குழந்தை கேசவன் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்த துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த குழந்தை கேசவனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த குழந்தையின் பெற்றோருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.